15.03.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா. 11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதிதாசன் | | |
| த/பெ | கலியமூர்த்தி | | |
| கிராமம் | பொம்பூர் | தொழில் | |
| தாலுக்கா | வானூர் | வயது | 38/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது திண்டிவனம் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2014ம்வருடம் விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் காவலராக பணி செய்தேன். கடந்த 06.05.2014ந் தேதி அன்று இரவு 8 மணி முதல் பகல் 8 மணி வரை பாரா பணியை பார்த்து வந்தேன். நான் பணிக்கு வருவதற்கு முன்பு இரண்டு பேர் காவல் நிலையத்தில் இருந்தார்கள். அப்போது பணியிலிருந்த காவலர் ஸ்ரீநாத் என்பவரிடம் அந்த இரண்டு நபர்கள் யார் என்று அவரை கேட்டேன். அவர் விசாரணைக்காக அவர்களை அழைத்து வந்துள்ளார்கள் என்று சொன்னார். யார் என்ன விசாரணை கேட்ட போது அவர்கள் ஆசாரியா என்பவரிடம் பையை பிடுங்கியது சம்மந்தமாக அந்த இரண்டு நபர்களில் ஒருவர் ஜெயவேல் என்பவரையும், மற்றொருவர் அங்கு வேலை செய்பவர்களுக்குள் சண்டை என்றும் அதனால் மற்றொரு நபர் துரை என்பவரை அழைத்து வந்துள்ளதாகவும் என்னிடம் தெரிவித்தார். அப்போது கொஞ்சம் நேரம் ஆன உடன் நான் அவர்களிடம் சாப்பிடுகிறீர்களா என்று கேட்டேன். மற்றொரு காவலர் அன்பரசன் என்பவரிடம் தோசை வாங்கி வரச்சொல்லி அவர் வாங்கிவந்த தோசையை அவர்களிடம் கொடுத்தேன். அதை சாப்பிட்டுவிட்டு அவர்கள் படுத்துக்கொண்டார்கள். அதன் பிறகு இரவு பணி புரிபவர்கள் வந்து ரோந்து புத்தகம்

எடுத்துக்கொண்டு சென்று விட்டார்கள். அதற்கு முன்பு சென்னையில் சில நாட்களுக்குள் முன்பு வெடிக்குண்டு வெடித்தது சம்மந்தமாக அன்று நிறைய போலீசார் வந்து இருந்தனர். அனைவரும் சென்று அங்கு பணியிலிருந்தனர். காலையில் சித்ரா என்ற ஒரு பெண் காவலர் அங்கு வந்தார். அவர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், நான் கர்ப்பமாக இருக்கிறேன் என்றும், அதனால் தனக்கு பாரா பணியை ஒதுக்கவேண்டாம் என்றும் கூறினார். நான் அவரிடம் ஆய்வாளரிடம் இது குறித்து கேட்டுக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டேன். அதன் பிறகு பாராவை அவரிடம் மாற்றிவிட்டு நான் கடலூர் சென்று விட்டேன். அதன் பிறகு மறுநாள் 07.05.2014ந் தேதி மணி சுமார் 11.30 இருக்கும். அப்போது ஸ்ரீநாத் என்பவர் எனக்கு போன் செய்தார். என்ன செய்தி என்று கேட்ட போது இது போன்று ஜெயவேல் என்பவருக்கு உடல் நிலை சரியல்லை என்றும் அதனால் அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்கிறோம் என்றும், அவர் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளார் என்றும், என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகு அவர் போன் வைத்துவிட்டார் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அன்று மதியம் 2 மணிக்கு மீண்டும் பணிக்கு வந்தேன். அப்போது நிறைய காவல் அதிகாரிகள் காவல் நிலையத்தில் இருந்தார்கள். நான் அவர்களை பார்த்துவிட்டு அப்படியே நின்று விட்டேன். அதன் பிறகு அவர்களை விசாரித்தபோது ஜெயவேல் என்பவர் இறந்துவிட்டார் என்பது தெரியவந்தது. நான் தகவல் தெரிந்து பிறகு பிளாட் பார்மிக்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு என்னை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து நீதித்துறை நடுவர் அம்மா வந்து விசாரணை செய்தார்கள். என்னை விசாரித்தார்கள் நான் எனக்கு தெரிந்த நடந்த விசயங்களை சொன்னேன். அதன் பிறகு என்னை வேலூர் சி.பி.சி.ஐ.டி போலீசாரும் விசாரணை செய்தார்கள். நான் நடந்தவைகளை கூறினேன்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் தெரிந்த விவரங்களை நான் சொல்லியுள்ளேன். என்னை சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரிக்கவில்லை என்றும், அவர்களாக ஏற்படுத்திக்கொண்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மையாகவே சாட்சி லோகேஸ்குமார் என்பவர் தான் சம்பவத்தில் உண்மையாக ஈடுபட்டவர் என்றும் இந்த விவரம் எனக்கு தெரியும்

என்றும் சொன்னால் அவர் பணியில் இருந்தார். சரியல்ல. அவர் அவருக்கு மேல் அதிகாரிகளிடம் இருந்த செல்வாக்கை பயன்படுத்தி அவர் வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக மேல் அதிகாரிகளிடம் சொல்லி இந்த வழக்கு எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2,4,5 எதிரிகள் தமதாக ஏற்றுக்கொண்டார்கள்.)**

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**